www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

வகுப்பு : 11

# இரண்டாம் இடைப் பருவத் தேர்வு - 2024

நேரம் : 1.30 மணி] தமிழ் [மொத்த மதிப்பெண்கள் : 50

I. அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. 8x1=8

1. பொருத்தி விடை தருக.

அ) விரியன் - 1) தண்டை

ஆ) திருமுருகு - 2) காலாழி

இ) நாங்கூழ்ப்புழு - 3) சிலம்பு

ஈ) குண்டலப்பூச்சி - 4) பாடகம்

அ) 3 4 2 1 ஆ) 4 1 3 2 இ) 4 3 2 1 ஈ) 3 1 4 2

2. கட்டடக்கலை என்பது உறைந்துபோன இசை என்றவர்

அ) ஷீல்ஸ் ஆ) பிரடிரிகா வொன்ஸ்லீவிங்

இ) எஸ். கே. கோவிந்தசாமி ஈ) ஜி.யு.போப்

3. சைவ சமயத்தின் பன்னிரு திருமுறைகளில் திருவாசகம் அமைந்துள்ளது

அ) ஏழாந்திருமுறை ஆ) ஒன்பதாம் திருமுறை இ) எட்டாம் திருமுறை ஈ) பத்தாம் திருமுறை

4. கூற்று : எட்டுத்தொகை நூல்களுள் ஒன்றான பதிற்றுப்பத்து புறம்சார்ந்த நூல்.

காரணம் : சேரமன்னர் பதின்மரின் சிறப்புகளைக் கூறுவது இந்நூல்.

அ) இரண்டும் சரி ஆ) கூற்று சரி ; காரணம் தவறு

இ) கூற்று தவறு, காரணம் சரி ஈ) இரண்டும் தவறு

5. ஆக்கப்பெயர் விகுதி பெறாத சொல்லைத் தேர்க.

அ) காவலாளி ஆ) மேலாளர் இ) உதவியாளர் ஈ) ஆசிரியர்

6. பாரதிதாசன் நடத்திய இதழ்

அ) குடும்ப விளக்கு ஆ) குயில் இ) அழகின் சிரிப்பு ஈ) பிசிராந்தையார்

7. சுந்தரராமசாமி இயற்றிய புதினங்களுள் ஒன்று

அ) ஒரு புளியமரத்தின் கதை ஆ) காகங்கள்

இ) பால்நிலாப்பாதை ஈ) புலம்பெயரும் பறவைகள்

8. Website, Blog - கலைச்சொல்லாக்கம் தருக.

அ) மின்னஞ்சல், பலகணி ஆ) தொடுதிரை, பிழை

இ) அனுப்புகை, கருமை ஈ) இணையம், வலைப்பூ

II. எவையேனும் மூன்றனுக்கு வினாக்களுக்கு விடையளி. 3x2=6

9. இந்தியக் கட்டடக் கலையின் மூன்று வகைகள் யாவை?

10. உழைப்பாளர்களின் தோள்வலிமையால் விளைந்தன யாவை?

11. சிங்கி பெற்ற பரிசுப் பொருட்களாகக் குற்றாலக் குறவஞ்சி கூறுவன யாவை?

12. செந்துறைப் பாடாண் பாட்டு - துறைவிளக்கம் எழுதுக.

III. எவையேனும் மூன்றனுக்கு விடையளி. 3x2=6

13. தொடர் மாற்றம் தருக.

அ) என்னே! மதுரை மீனாட்சி அம்மன் கோவில் சிற்பக்கலை (செய்தித் தொடராக்குக).

ஆ) நான் வாரத்தின் இறுதிநாள்களில் நூலகத்திற்குச் செல்வேன்,
(பொருள் மாறாமல் எதிர்மறைத் தொடராக்குக)



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

14. கோடிட்ட இடங்களை நிரப்புக.

அ) கார்காலம் – ---------- ; குளிர்காலம் – ஐப்பசி, கார்த்திகை -------- – மார்கழி, தை

ஆ) எழுத்து, ----------; சீர், தளை, ----------, தொடை.

15. மரபுச் சொற்களைத் தொடரில் அமைத்து எழுதுக.

அ) எதிர்நீச்சல் ஆ) நிறைகுடம்

16. புணர்ச்சி விதி கூறுக.

அ) கற்பிளந்து ஆ) உலகனைத்தும்

17. இலக்கணக் குறிப்பு தருக.

அ) தமிழ்க்கவிஞர் ஆ) கொல்புலி

IV. எவையேனும் மூன்றனுக்கு விடையளி. 3x4=12

18. ஃப்ரெஸ்கோ ஓவியங்கள், கற்றளிக் கோவில்கள் குறித்து நீவிர் அறிவன யாவை?

19. திருவாசகம் – குறிப்புத் தருக.

20. "உயர் தமிழை உயிரென்று போற்றுமின்கள்" – இடம் சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

21. 'நாழிக்குள் திணிக்கும் மருந்துபோல்' என்னும் உவமையை ஜீவானந்தம் வாழ்வுடன் ஒப்பிடுக.

V. எவையேனும் இரண்டனுக்கு விடையளி. 2x4=8

22. இலக்கிய நயம் பாராட்டுக.

சுதந்திரம் தருகிற மகிழ்ச்சியைக் காட்டிலும்
சுகம் தரும் உணர்ச்சியும் வேறுண்டோ?
பதந்தரும் பெருமையும் பணம்தரும் போகமும்
பார்த்தால் அதைவிடக் கீழன்றோ?
இதந்தரும் அறங்களும் இசையுடன் வாழ்தலும்
எல்லாம் சுதந்திரம் இருந்தால் தான்
நிதந்தரும் துயர்களை நிமிர்ந்து நின்று எதிர்த்திட
நிச்சயம் சுதந்திரம் அது வேண்டும்!

– நாமக்கல் கவிஞர்

23. பிறிது மொழிதல் அணி (அ) உருவக அணியைச் சான்றுடன் விளக்குக.

24. பாடாண்திணையைச் சான்றுடன் விளக்குக.

VI. எவையேனும் ஒன்றனுக்கு விடையளி. 1x6=6

25. 'கல்லும் கதை சொல்லும்' – என்னும் தொடர், தஞ்சைப் பெரிய கோவிலுக்குப் பொருந்துவதை விளக்கி எழுதுக.

(அல்லது)

26. 'சிம்பொனி'த் தமிழரும், 'ஆஸ்கர்' தமிழரும் இசைத்தமிழுக்கு ஆற்றிய பணிகளை நும் பாடப்பகுதி கொண்டு தொகுத்தெழுதுக.

(அல்லது)

27. பாரதிதாசன் ஒரு புரட்சிக்கவி என்பதை, உதாரன் பாத்திரம் வாயிலாக மெய்ப்பிக்க.

VII. அடிமாறாமல் எழுதுக. 1x4=4

28. 'சிற்றாரும் வரப்பெடுத்த' எனத் தொடங்கும் பாடல்



Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com